OS 237/2021 PW1- **தேனம்மாள்**

**க/பெ மாயன்** **தேதி** 28.04.2026

**மனுதாரர் தரப்பில் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 2015ம் ஆண்டு பாகம் கேட்டு வழக்கறிஞர் அனுப்பினேன் என்றால் சரிதான். 7 வருடங்களுக்கு கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 7 வருடம் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்ததற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை. வழகுகு தாக்கல் செய்வதற்கு நான்கு வருடங்களுக்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கம் இருக்கிறது சம்பந்தமாக பார்த்தேனா என்றால் வில்லங்கம் பார்த்துவிட்டேன். மறுபடியும் வாதி தாக்கல் செய்த பின்பு தான் நான் வில்லங்கம் பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வில்லங்கம் பார்த்து ஆவணங்களை பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அப்பா முத்துகண்ணுத்தேவர் என்பவருக்கு மொத்தமாக செண்ட் 53 தாவா சொத்து 1வது இலக்கத்தில் 11 செண்டும், 2வது இலக்கத்தில் 2 செண்டும் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் தாவா சொத்து மட்டும் தெரியும், 53 செண்டு பற்றி தெரியாது. எனது சித்தப்பா பெயர் பெரியமாயத்தேவர். எனது சித்தப்பாவிற்கு மேற்படி 53 செண்டிற்கு கீழ்புறம் அவருக்கு பாத்தியம் இருந்ததா என்றால் தெரியாது. எனது கணவரின் அப்பா பெயர் பேயாண்டித்தேவர். பி. வா.சா.ஆ.11ல் கண்டுள்ள செண்டு 53 பொருத்து எனது தகப்பனார், எனது சகோதரன் 1வது பிரதிவாதி சேர்ந்து எனக்கும் எனது கணவருக்கும் கிரையம் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது.

2) எனது கணவர் கையெழுத்து போடுவார். பி.வா.சா.ஆ.12 ஆவணமானது நானும் எனது கணவரும் சேர்ந்து கடந்த 10.04.1996ல் மாயாண்டி மகன் ராமன் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்தோம் என்றால் தெரியாது. மேற்படி 53 செண்டிற்கு நிலத்தை கிரையம் செய்து கொடுப்பதற்கு எனது அப்பாவும் எனது சகோதரரும் என்னிடம் எந்த பிரதிபலனும் பெறாமல் இனாமாக கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 53 செண்டை நானும் எனது கணவரும் கிரையம் பெற்றதை நான் ஏற்றுக்கொண்டு விட்டால் இந்த வழக்கில் எனக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் வழக்கிற்காக நான் மேற்படி கிரையம் பெற்றதையும் ராமன் என்பவருக்கு

கிரையம் கொடுத்ததையும் மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனது அம்மா 50 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அம்மா இறக்கும் போது எனக்கு 9 வயது இருக்கும். 1வது பிரதிவாதி ராமனுக்கு 5 வயது இருக்கும். என்னையும் எனது சகோதரனையும் எனது அப்பாவின் தாயார் அங்கம்மாள் என்பவர் வளர்த்தார் என்றால் சரிதான். மேற்படி அங்கம்மாள் எனது திருமணத்திற்கு பின் இறந்தார் என்றால் சரிதான். எனக்கு 1979ல் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு திருமணமாகி 32 வருடங்களாகிறது. எனது மூத்த மகள் வசந்தி என்பவருக்கு 35 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது மகன்கள் பிரபு, சேது ஆகியோர்களுக்கு 32 மற்றும் 30 வயது இருக்கும். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிராதில் உள்ள எனது கையெழுத்தும் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் ஒரே கையெழுத்து தான் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Thennammal
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.